# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.368/ 2018

### அ.சா. 2 (LW 2)

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | கேசவமூர்த்தி | **தொழில்** | |
| **த/க பெயர்** | பாஸ்கர் | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலூகா** | | **தேதி** | **25.07.2025** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 வது எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். 2 வது எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 பிரிவின் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 3,4 எதிரிகள் ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது மதுரை செல்லூரில் 1வது புதுத் தெரு, கதவு எண். 10ல் குடியிருக்கிறேன். நான் BCA படித்திருக்கிறேன். கரூர் வைஸ்யா வங்கியில் உதவி மேலாளராக பணிபுரிகிறேன். இவ்வழக்கில் இறந்து போன மோகன்ராஜை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளையும் எனக்கு தெரியும். மோகன்ராஜ் எனக்கு நண்பர் . 2018 ஆண்டு ஜுன் 2 அன்று மாமா பூபாலன் என்பவரின் மகன் கண்ணன் என்பவரின் திருமணத்திற்கு நான், சூர்யா, மோகன்ராஜ், பூபாலன் ஆகியோர் 2 இரு சக்கர வாகனங்களில் சென்றிருந்தோம். அன்று இரவு 09.00 மணிக்கு மதுரையிலிருந்து கிளம்பினோம். காலை 04.00 மணிக்கு கோயம்புத்தூரில் உள்ள எல்ஐசி காலனிக்கு போய் சேர்ந்தோம். ஜூன் 3 2018 அன்று காலையில் நடந்த திருமணத்தில்கலந்து கொண்டு விட்டு அன்று மாலை 05.30 மணிக்கு மேல் கோயம்புத்தூரிலிருந்து 2 இருசக்கர வாகனங்களில் மதுரைக்கு வந்து கொண்டிருந்தோம். கொடைரோடு டோல்கேட் தாண்டி கன்னிமார் நகர் அருகே இரண்டுஇருசக்கர வாகங்களை நிறுத்தி விட்டு சிறுநீர் கழிப்பதற்காக நான் பூபாலன், சூர்யா, மூவரும் சற்று தூரம் நடந்து சென்றோம். மோகன்ராஜ் மட்டும் DIO TN 59 BQ 6700 என்ற வாகனத்தில் உட்கார்த்திருந்தான். அந்த சமயத்தில் ஒரு இரண்டு சக்கர வாகனம் FZ என்ற யமகா வாகனம் அந்த இடத்தில் நின்றது. அதிலிருந்து 2 பேர் இறங்கி மோகன்ராஜை நோக்கி நடந்தார்கள். 30 செகண்டுகளுக்குள் இன்னொரு இருசக்கர வாகனம் வந்து அதே இடத்தில்

நின்றது. அந்த வாகனத்திலிருந்தும் 2 பேர் இறங்கி மோகன்ராஜ் இருந்த இடத்தை நோக்கி நடந்தார்கள். முதலில் இறங்கி வந்த 2 பேர் மோகன்ராஜிடம் ஏதோ பேசினார்கள். அப்போது மோகன்ராஜ் கீழே கிடந்த ஒரு சிமிண்ட் கல்லை எடுத்து தன்னிடம் பேசியவர் முகத்தில் தாக்கினார். மோகன்ராஜ்ம், மோகன்ராஜிடம் வந்து பேசியவர்களும் சண்டை போட ஆரம்பித்தார்கள். உடனே சூர்யாவும், பூபாலனும் மோகன்ராஜ் மற்றவர்களும் சண்டை போட்ட இடத்திற்கு இடத்திற்கு ஓடினார்கள். நானும் அந்த இடத்திற்கு அருகே போய் விட்டேன். அப்போது பூபாலனுக்கு அருகில் இருந்த ஒருவர் பூபாலனை கத்தியால் வெட்ட வந்தார். பூபாலன் அணிந்திருந்த ஜர்க்கினின் கழுத்து பின்புறத்தில் இருந்து கேப்பை இழுத்து விட்டு விட்டு நானும் பூபாலனும் கொடை ரோடு நோக்கி ஓடினோம். சூர்யா அதே திசையில் ஓடி வந்தார். இவை அனைத்தும் நாங்கள் வண்டியை நிறுத்திய 2 , 3 நிமிடங்களில் நடந்து முடிந்து விட்டது. அந்த இடத்திற்கு 2 வாகனங்களில் வந்தவர்கள் உடடினயாக அவர்கள் வந்த வண்டியை எடுத்துக் கொண்டு மதுரை நோக்கி சென்றார்கள். அந்த வண்டிகள் அங்கிருந்து போனவுடன் நானும் பூபாலனும், சூர்யாவும் , மோகன் இருந்த இடத்திற்கு ஓடி வந்தோம். அங்கு மோகன் கீழே விழுந்து கிடந்தான். நாங்கள் போய் பார்த்த போது மோகனின் வயிற்றிலிருந்து குடல்கள் வெளியேறிய நிலையில் கிடந்தான். நாங்கள் அந்த பகுதியில் வந்த காரை நிறுத்த முயற்சி செய்தோம். அந்த காரில் வந்தவர் இறங்கி வந்து மோகனை பார்த்தவுடன் தனது காரை எடுத்துக் கொண்டு மதுரையை நோக்கி போய்விட்டார். நான் எனது செல்போனிலிருந்து 108 க்கும், 100 க்கும் தகவல் சொன்னேன். அம்மையநாயக்கனூர் காவல்நிலையத்திலிருந்து போலிசார் வந்தார்கள். ஆம்புலன்ஸ் வந்தது. என்னையும், பூபாலனையும், சூர்யாவையும் போலிஸ் வாகனத்தில் அம்மையநாயக்கனூர் காவல்நிலையம் கொண்டு சென்றார்கள். மோகன்ராஜை ஆம்புன்சில் கொண்டு சென்றார்கள். எங்கு கொண்டு போனர்கள் என எனக்கு தெரியாது. நான் அம்மையநாயக்கனூர் காவல்நிலையத்திலிருந்து மோகன்ராஜ் அப்பாவுக்கு போன் மூலம் பேசினேன். ஜுன் 4 2018 அன்று காலையில் மோகன்ராஜின் அப்பா அம்மையநாயக்கனூர் காவல்நிலையம் வந்தார். நாங்கள் நடந்த விவரத்தை மோகன்ராஜின் அப்பாவிடம் சொன்னோம். மோகன்ராஜின் அப்பா அம்மையநாயக்கனூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். அதன்பிறகு எங்களை போலிசார் விசாரித்தார்கள். 3 நாட்கள் அங்கு வைத்து விசாரித்தார்கள். எதிரிகளை அடையாளம் காட்டுவதற்காக ஒருசில இடங்களுக்கு போலிசார் எங்களை கூட்டிச் சென்றார்கள். 1 1/2 மாதம் கழித்து மதுரை குரு தியேட்டர் அருகே 1 நபருக்கு மார்பில் கத்தியால் குத்தி மதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருப்பதாக கேள்விப்பட்டு அந்த நபரை பார்ப்பதற்காக அந்த மருத்துவ மனைக்கு நான், சூர்யா, பூபாலன், போலிசார் இருவர் போனோம். அந்த காயம்பட்டவரிடம் பேச முயற்சித்தோம். எதாவது தகவல் பெற முடியுமா என முயற்சித்தோம். ஆனால் அவரால் பேச இயலவில்லை. மீண்டும் 1 மாதம் கழித்து அம்மையநாயக்கனூர் காவல்நிலையத்தில் என்னை அழைத்தார்கள். மோகன்ராஜை தாக்கியவர்கள் 4 பேரையும் நாங்கள் பிடித்து விட்டோம் என்றும் அதனால் காவல்நிலையத்திற்கு வாருங்கள் என என்னை அழைத்தார்கள். அதன்படி

காவல் நிலையத்திற்கு போனோம். காவல்நிலையத்தில் 2 பேரை பார்த்தோம். அதன்பிறகு அவர்கள் எங்களை நீதிமன்றத்திலிருந்து சம்மன் வரும் போது வாருங்கள் என்று சொல்லி அனுப்பி வைத்தார்கள். அதன்படி 1 வாரத்திற்குள் சம்மன் வந்தது. மதுரை ஜெயிலுக்கு போனேன். அங்கு மேஜிஸ்ட்ரேட் வந்திருந்தார். அங்கு 20,30 பேர்கள் நின்றார்கள். அங்கு 20, 30 பேரில் 4 பேரை நான் அடையாளம் காட்டினேன். ஆப்பிள் கார்த்திக், அஜித், நாகசூர்யா, புலிக்குட்டி ஆகியோரை அடையாளம் காட்டினேன். நான் அடையாளம் காட்டிய நபர்கள் ஆஜர் எதிரிகள் தான். நான் மோகன்ராஜை பார்த்த போது வேறு காயங்களை நான் பார்க்கவில்லை. போஸ்ட் மார்ட்டம் முடிந்த பின்பு அவனுக்கு மார்பு பகுதியிலும் இரண்டு குத்து காயங்கள் இருந்ததாக சொன்னார்கள். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளது என்னுடைய இரு சக்கர வாகனம் ஆகும். அந்த புகைப்படம் அ.த.சா.ஆ.2.வரிசை ஆகும் ( 2 எண்ணிக்கை ). ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் பேரில் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P VELMURUGAN

Digitally signed by P VELMURUGAN
Date: 2025.07.26 20:40:13 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.